மக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்10 வள்ளுவர் ஆண்டு2026 புரட்டாதி21 ஞாயிற்றுக்கிழமை(08-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 318

# ரோந்து சென்ற படையினர் மீது முல்லைத்தீவில் புலிகள் அதிரடி!

## சிப்பாய்கள் ஐவர் பலி! 8 பேர் காயம்!!

கொழும்பு, ஒக்டோபர் 8

முல்லைத்தீவில் நேற்றுக் காலை ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எட்டுப் பேர் படுகாயமடைந்தனர்.

கால்நடையாக படையினர் ரோந்து சென்ற வேளை விடுதலைப் புலிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் --

அதனை அடுத்து அப்பகுதியில் இரு தரப்பினரிடையேயும் மோதல் இடம்பெற்றதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவத்தினர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். [ஐ-4-6]

## படையினருக்கு ஆசிகூற பிக்குமார் பலாலி விஜயம்

### 5 ஆயிரம் பிரித் நூல்களை வழங்கினர்

கொழும்பு, ஒக். 8

வடபகுதியில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள படையினருக்கும் பொலிஸாருக்கும் ஆசி வழங்க பல பௌத்த தேரர்கள் அடங்கிய குழு ஒன்று நேற்று பலாலி படைத்தளத்துக்கு விஜயம் செய்தது.

பிரதம சங்க நாயக்கரும் இராணுவத்தின் பௌத்த ஆலோசகருமான அவின்கலகே விசிப்திநாயக்க தேரர் தலைமையில் பல பிக்குமார் அக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

பலாலி படை முகாமில் அவர்கள் சமய வைபவங்களை நடத்தினர். படையினரை ஆசீர்வதித்து அங்கு பிரித் ஓதப்பட்டது.

இராணுவத்தினரின் உயிர்ப்பாதுகாப்புக்கென சமார் 5 ஆயிரம் பிரித் நூல்களை அவர்கள் வழங்கினர்.

பலாலியில் உள்ள இராணுவ ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த பௌத்த குருமார் அங்கு காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் படையினரை பார்வையிட்டனர்.

அவர்கள் குணமடைய வேண்டி பிரார்த்தித்தனர்.

மேற்படி பௌத்த குருமார் குழுவினர் வடபகுதியில் உள்ள பல படைமுகாம்களுக்கும் விஜயம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஐ 6]

## ராணுவமும் பொலிஸாரும் கூட்டாக கொழும்பில் தேடுதல் நடவடிக்கை

கொழும்பு, ஒக். 8

கடந்த புதன்கிழமை பொலிஸாரும் இராணுவத்தினரும் பாரிய கூட்டுத்தேடுதல் நடவடிக்கை ஒன்றைக் கொழும்பில் நடத்தினார்கள்.

காலை 4 மணி முதல் இந்த நடவடிக்கை இடம்பெற்றது.

கோட்டை ரயில் நிலையம் உட்பட தலைநகரின் முக்கிய இடங்களில் இத் தேடுதல் நடவடிக்கை இடம் பெற்றது.

பயணிகள் பலர் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டனர். அவர்களது பொதிகளும் சோதனை செய்யப்பட்டன. [இ-க]

## மட்டுநகரில் 5 மாதங்களில் 28 மின் மாற்றிகள் சேதம்

யாழ்ப்பாணம், ஒக். 8

மட்டக்களப்பில் கடந்த 5 மாதங்களில் மட்டும் 28 மின் மாற்றிகள் சேதமாக்கப்பட்டுள்ளன என்று ஸ்ரீலங்காவின் மின்சாரசபை அறிவித்துள்ளது.

இதனால் 39 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

22 லட்சம் ரூபா செலவில் புதிதாகப் பொருத்தப்பட்ட 10 மின் மாற்றிகளும் சேதப்படுத்தப்பட்டவைகளில் அடங்கும். [இ-4]

## படகு சேவை 2 தினங்கள் நடைபெறாது

யாழ்ப்பாணம், ஒக். 8

கிளாலி படகுச் சேவை நாளை திங்கட்கிழமையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் நடைபெறமாட்டாது என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். [இ-4]

## பலாலி ஷெல்லுக்கு நேற்று வல்வையில் மூவர் காயம்!

வடமராட்சி, ஒக். 8

பலாலி முகாமில் இருந்து வல்வெட்டித்துறை பகுதியை நோக்கி நேற்று முற்பகலும் படையினர் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி மூவர் காயமடைந்தனர். எஸ். மணிவண்ணன் (வயது 18), கே. சற்குணராசா (வயது 32), எம். கெங்காதரன் (வயது 22) ஆகிய மூவருமே காயமடைந்தனர். மந்திகை ஆஸ்பத்திரியில் இவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-173)

## வெள்ளி நள்ளிரவு மோதல் புத்தூரில் சிப்பாய் பலி

கொழும்பு, ஒக். 8

புத்தூர் பகுதியில் வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்குப் பின் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் இவ்வாறு அறிவித்துள்ளது. (ஐ)

## வவுனியா கல்விக் கல்லூரி மாணவர் உண்ணாவிரதம்

### இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

கொழும்பு, ஒக். 8

வவுனியா கல்விக் கல்லூரிக்கு விரிவுரையாளர்கள் நியமிக்கப்படாததை ஆட்சேபித்து அக்கல்விக் கல்லூரியைச் சேர்ந்த மாணவ மாணவிகள் தண்ணீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

உண்ணாவிரதம் இருந்தவர்களில் இரு மாணவிகளின் உடல் நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை அவர்கள் இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் ஏனைய மாணவரின் உண்ணாவிரதம் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா கல்விக் கல்லூரி மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் நிரந்தர விரிவுரையாளர் இன்றியே இக்கல்லூரி செயற்பட்டு வருகிறது.

தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் தாம் தீமூட்டித் தற்கொலை செய்யவும் தயங்கப்போவதில்லை என்று உண்ணாவிரதம் இருந்து வரும் மாணவ — மாணவிகள் பயமுறுத்தி வருகின்றனர். (இ)

## இடம்பெயர்ந்த மக்கள் வன்னிக்கு நகர்வு

வடமராட்சி, ஒக். 8

குடாநாட்டில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களில் பலர் வன்னிப் பகுதிக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ள பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கிளாலி ஊடாக கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளுக்கு செல்கின்றன.

இவ்வாறு வன்னிக்கு இடம் பெயர்வோரின் எண்ணிக்கை கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது. (ஐ-173)

### குடாநாட்டில் கணிசமான அளவு மழை

யாழ். குடாநாட்டில் நேற்று முன்தினம் இரவு பரவலாக நல்ல மழை பெய்தது. நேற்றுக் காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் 38 4 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசரின் விஜயத்தை பயன்படுத்தி புலிகள் கொழும்புக்குள் ஊடுருவலாம்

## பாதுகாப்பு அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 8

தற்பொழுது கொழும்பில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகளில் பெரும்பாலோர் இந்த ஆண்டு முற்பகுதியில் பாப்பரசர் கொழும்பு வந்தபோது அவரைத் தரிசிக்கும் சாட்டில் கொழும்பு வந்தவர்கள் என்று பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியதாக 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பாப்பரசரைத் தரிசிக்க 800க்கு மேலானோர் வடக்கிலிருந்து வந்தார்கள் இவர்களில் எவரும் பின்னர் யாழ்ப்பாணம் திரும்பவில்லை. அநேகர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உடையவர்கள்.

இவ்வாறு அந்த அதிகாரி மேலும் கூறியதாக ஐலண்ட் தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகள் தமது சகாக்களை தெற்குக்கு அனுப்ப பாப்பரசர் வரவைப் பயன்படுத்தியதுடன் இவர்களுக்கு ஜோசப், அன்ரனி, வாஸ் முதலிய கிறிஸ்தவப் பெயர்களையும் வைத்தனர் என்றும்—

இத்தகைய பெயர்களுடன் கொழும்பு சென்ற எவருமே யாழ்ப்பாணம் திரும்பவில்லை என்றும் –

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்பு உடையவர்கள் சிலர் பாப்பரசரின் வருகையின் போது கொழும்பு சென்றவர்களே என்றும் அவர் மேலும் கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-ஈ)

# வங்கிகளுக்கு பணம்: அமைச்சு முட்டுக்கட்டை

யாழ். மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளுக்கு பணம் எடுத்து வருவதை, பாதுகாப்பு அமைச்சு பல முட்டுக் கட்டைகளைப் போட்டுத் தடுத்து வருவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது யாழ். மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக்கிளைகளில் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாவாக பண விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை விளக்கி, யாழ். மாவட்ட இலங்கை வங்கிக் காரியாலயம் கொழும்பில் உள்ள தனது தலைமைக் காரியாலயத்திற்கு கடிதங்கள் மூலமும், நேரடித் தொலைத் தொடர்புகள் மூலமும் தெரியப்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து இலங்கை வங்கி அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்குபணத்தை அனுப்ப முயற்சி மேற் கொண்டனர்.

எனினும் அந்த முயற்சிக்கு பாதுகாப்பு அமைச்சு முட்டுக் கட்டைகளைப் போட்டு வருகிறது — என்று வங்கி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதே சமயம் அடுத்த மாதம் முற்பகுதிக்குள் தமக்குத் தேவையான பணத்தை யாழ். மாவட்ட இலங்கை வங்கிக் கிளைகள் தருவித்துத் தராவிட்டால், வங்கிக் கிளைகள் முன் மறியல் போராட்டம் நடத்தப் போவதாக வங்கி வாடிக்கையாளர்கள் அறிவித்துள்ளது தெரிந்ததே.

## இராணுவ தொண்டர் படை ஆள் சேர்ப்பு

கொழும்பு, ஒக். 8

இராணுவ தொண்டர் படைக்கு ஆட்களை சேர்த்துக் கொள்ளுவதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று தொடக்கம் இம் மாதம் 15 ஆம் திகதி வரை தென்பகுதியில் பல நிலையங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-4]

## கோண்டாவிலில் பாதுகாப்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 8

தேசிய பாதுகாப்பு நிதி சேகரிப்பு பின்வரும் கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு இன்று ஞாயிறு முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கோண்டாவில் பகுதி— ஜே-115, ஜே-116, ஜே-117, ஜே-118, ஜே-119. [ஐ]

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்ட பாடசாலைகளிடையே, உப மாவட்டத்திற்காக நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணி முதல் யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய ஆட்டங்களின் விவரம்;

★ பிற்பகல் 3 மணி— 3 ஆம் இடத்திற்கான ஆட்டம்—

கொக்குவில் இந்து எதிர்— சென் ஜேம்ஸ் ம. வி.

★ மாலை 4 மணி — இறுதி ஆட்டம்—

யாழ் இந்துஎதிர்—நாவாந்துறை றோ. க. வி. (எ)


**S.T.S. போக்குவரத்துச் சேவையினரின்**

**இசுகு சொகுசு பஸ் சேவை**

யாழ்ப்பாணம் — பருத்தித்துறை

பாதை இல. 751

| | | |
|---|---|---|
| காலை | 7-10 | பருத்தித்துறை |
| காலை | 10-30 | யாழ்ப்பாணம் |
| நண்பகல் | 1-30 | பருத்தித்துறை |
| பிற்பகல் | 4-00 | யாழ்ப்பாணம் |
| சனி, ஞாயிறு | | |
| காலை | 7-30 | பருத்தித்துறை |
| பிற்பகல் | 2-00 | யாழ்ப்பாணம் |

எமது ஸ்தாபனம் மக்களின் நன்மை கருதி குறைந்த கட்டண விகிதத்தில் விசேட பஸ் சேவையையும் நடத்துகின்றது என்பதனை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

S.T.S. போக்குவரத்துச் சேவை
கப்ரன் பாரத் வீதி, மானிப்பாய்

(38914)



**31-ம் நாள் நினைவஞ்சலி**



திருமதி
சபாநாயகம் மனோன்மணி

அன்பாய் அரவணைத்து ஆதரவாய் எமைவருடி
இன்பமுடன் இன்மொழிகள் எடுத்து இயம்பி
துன்பமெலாம் போக்கித் துயர் துடைத்து
உன்நிழலில் எமைக்காத்த அன்புத்தெய்வமே!

உங்கள் பாசத்தை நினைத்து உருகும்;

| | | |
|---|---|---|
| அன்புக் கணவர் | | சபாநாயகம் |
| | மகள் | அனுசுயா |
| | மகன் | திவாகர் (ஜேர்மனி) |
| | மகன் | சுதாகர் (சுவிஸ்) |
| | மருமகள் | தர்மினி (ஜேர்மனி) |
| | | சகோதரங்கள். |

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

[38913]


## புலிகளின் குரல் வானொலியில்

08 – 10 – 1995

ஞாயிறு இரவு

★ 8-02 — நீங்கள் கேட்டவை
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம்— பொன். கணேசமூர்த்தி எழுதிய "இலங்கைமண்" அங்கம் 14

09 – 10 – 1995

திங்கள் காலை

★ 7-02 —மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

ஞாயிறு மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — கதம்பம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி


தெல்லிப்பழை - பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (மட்டு)

அங்கத்தவர்கள், பொதுச்சபை உறுப்பினர்களுக்கான

**விசேட கலந்துரையாடல்**

| | |
|---|---|
| தலைவர் : | திரு. நா. கணேசன் |
| இடம் : | கோண்டாவில் - பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் படிப்பகத்தில். |
| காலம் : | 09-10-95 திங்கள் காலை 10-00மணி |
| விடயம் : | "சங்கத்தின் இன்றைய நிலை தொடர்பாக ஆராய்தல்" "இடம் பெயர்ந்த உறுப்பினர்கள் வேறு சங்கப் பிரதேசத்தில் தொழில் வசதி பெறுதல் தொடர்பாக ஆராய்தல்" |
| சிறப்புரை: | கூ. ஆ. உ. ஆணையாளர் அவர்கள் (பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதி) |

சகல அங்கத்தவர்களும் உரிய நேரத்திற்கு தவறாது சமுகமளித்து தமது கருத்துக்களைத் தெரியப் படுத்தி, சங்க வளர்ச்சிக்கும் எதிர்காலச் செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்;
கூட்டுறவுச் சேவையிலுள்ள,

நா. கணேசன் — தலைவர்
க. சண்முகலிங்கம் — செயலாளர்

[38907]



**4 ஆம் ஆண்டு நினைவலைகள்**



அமரர்
S.R. பொன்னம்பலம்
ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்
[கோவிலாக்கண்டி]

திதி. 08 – 10 – 1995

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி

126/4, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(38851)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இந்து சமயப் பேரவைத் தலைவர்
# அமரர் ஆத்மஜோதி நா. முத்தையா அஞ்சலி மலர்
(08 - 10 - 1995)

## அஞ்சலிச் செய்தி

### நல்லை ஆதீன முதல்வர்

அன்புடை நெஞ்சத்தார் ஆத்மஜோதிப் பெரியார் நா. முத்தையா அவர்கள் சிவபதம் எய்திய செய்தி அறிந்து பெரிதும்மனத்தாக்க முற்றோம். இந்த மண்ணில் ஈடுசெய்ய முடியாத பெரிழப்பு சைவசமயத்தைப்பேணி வளர்க்கும் தந்தை போன்றவர். வேதாந்தசாரம் ஆன புகழ் ஆரமிகள் சூட்டப்பெற்றவர், அரிய சைவசமய நூல்களை ஆக்கியவர் பிறநாடுகளிலும் அவரின் புகழ் மங்காது நிற்கும் ஆடம்பரமில்லாத உடை, அமைதியான பேச்சு, பரோபகாரசிந்

— ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்

தனை எல்லோரையும் இன்முகம் காட்டி உபசரிக்கும் உயர்பண்பு ஆகிய நற்குணங்களைக்கடைபிடித்து வாழ்ந்த மகான்ஆத்மஜோதி ஐயாவை அறியாதார் இலர்.

அன்னாரது ஜீவாத்மா பரம்பொருளின் திருவடிகளைச் சார்ந்து நிரதிசய நித்தியானந்த சாந்தி நிலை எய்த வேண்டும் என நாமெல்லோரும் பொய்மையிலா தூயஉளநிறை வோடுபிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

### துர்க்கா துரந்தரி

"நீ எதனை உலகுக்கு வழங்குகிறாயோ அதுவே உனக்குச் சொந்தம். ஆகவே ஆனந்தத்தை வழங்கினால் அது உனக்கே சொந்தம்மாகிறது" என்பது சுவாமி சிவானந்தரின் வாக்கு இந்த நல்வாக்கைத் தனது வாழ்வின் மூலம் மெய்ப்பித்தவர் ஆத்மஜோதி ஐயா அவர்கள் மனதிலுறுதியும் வாக்கிலே தூய்மையும் நினைவு நல்லதாயும் அமைத்து வாழ்ந்த பெருந்தகை இன்று அமரராகி விட்டார் என்ற செய்தி உள்ளத்தை நெகிழ வைக்கிறது.

மலையகத்து மக்களுக்காக

### சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

கல்வி பணியும், சமூகப் பணியும், சமயப் பணியுமாற்றி கால்நூற்றாண்டுக்கு மேலாக அப் பகுதி மக்களின் அபிமானத்தைப் பெற்றவர் இவர். அல்லலுறும் மக்களுக்கு அபயகரம் நீட்டி ஆதரித்த வள்ளல் இவர்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக யாழ். இந்து சமயப் பேரவை தலைவராக அமர்ந்து சைதடி சைவச் சிறார்க்கு நற்பணியாற்றி வந்தவர். சிறந்த பேச்சாளரும் நாடறிந்த நல்ல எழுத்தாளருமாகவும் விளங்கிய இப் பெரியாரின் ஆத்மீகப் பாதயாத்திரையும் கூட்டுவழிபாடும் சைவ மக்களின்உள்ளத்தை கொள்ளை

(7 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தின் ஆன்மீக வள்ளல்

## ஆத்மஜோதி நா. முத்தையா

அமரர் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் ஏழாலைக் கிராமத்தில் 1918ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25ஆம்நாள் ஞானஜோதியாக அவதரித்தார். இவரது தந்தையார் நாகமணி. தாயார் பொன்னுப்பிள்ளை. பெற்றோர் சைவத்தமிழ்த் தர்மவான்கள். ஐயா தமது ஆரம்பக் கல்வியை ஏழாலை சுத்தோவிக்க பாடசாலையிலும், சுன்னாகம் மயிலணி சைவவித்தியாசாலையிலும் பயின்றார்.

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஆசிரியர் தராதரப் பத்திரப் படிப்பை மேற்கொண்டு சித்தியெய்தியபின் 1937ஆம் ஆண்டு திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார். அக்காலப் பகுதியில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நன்மாணாக்கனாகத் திகழ்ந்து அவரது அரவணைப்பைப் பெற்றுக்கொண்டார்.

1939ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ஆம் திகதி நாவலப்பிட்டியிலுள்ள புனித மேரிஸ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பதவி ஏற்றார். 1948ஆம் ஆண்டு நாவலப்பிட்டியிலுள்ள கதிரேசன் வித்தியாசாலைக்கு மாற்றம் பெற்று 1976ஆம்ஆண்டுஓய்வு பெறும்வரை அங்கேயே கடமையாற்றினார்.

1960 தொடக்கம் 1976 ஆம் ஆண்டு வரை அந்த வித்தியாசாலையின் அதிபராக இருந்து அருந்தொண்டாற்றினார். அன்பாலும், பண்பாலும், அரவணைப்பாலும் ஆசிரிய மாணவ நல்லுறவைப் பேணி அவர்கள் உள்ளங்களில் நிலை கொண்டார். அக்காலப் பகுதியில் அகில இலங்கை ஆசிரியர் சங்க உபதலைவராகவும், செயலாளராகவும் இருந்து ஆசிரிய உலகுக்கு தொண்டு பல புரிந்தார்.


*சமயப்பணி*

இறைபக்தி, அடியார்பக்தி, தர்மசிந்தனை நிறைந்த குடும்பத்தில் அவதரித்த இவர் இளமையில் தமது வீட்டிற்கு அருகிலுள்ள இலந்தை கட்டி ஞான வைரவர் ஆலயத்தில் சரியைத் தொண்டு புரிந்து வந்து அப்பெருமானால் ஆட்கொள்ளப் பட்டார்.

புராண படனம், சமயச் சொற்பொழிவு ஆகியவற்றில் கூடிய ஈடுபாடு இருந்த போதும் ஆத்மஜோதி அவர்கள் அடியார் புடைசூழ கூட்டுப்பிரார்த்தனை செய்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தார். பாதம் பின்னப் பின்ன அடியார் கூட்டம் முன்னும் பின்னும் செல்ல திருத்தலங்களுக்கு பாதயாத்திரை மேற்கொள்வார்.

1955ஆம் ஆண்டு தொடக்கம் நல்லூர்க் கந்தசாமி கோயில் தேர்த் திருவிழா அன்று ஏழாலை இலந்தைகட்டி ஞான வைரவர் கோவிலில் இருந்து பாதயாத்திரையாக அடியார்களுடன்செல்லுவார். இந்த யாத்திரை பக்தி யாத்திரையாக இன்றும் மிளிர்கிறது.

ஆத்மஜோதி எனும்



மாதாந்த ஆத்மீக சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து எழுதிய, எழுதுவித்த ஆக்கங்கள் அனேகம் ஐயாவின் தத்துவக் கட்டுரைகள், கதைகள் சொற்பொழிவுகள் இவரது அகவுணர்வை வெளிக்காட்டும். மலையகத்தையும் தமிழீழத்தையும் இணைத்துப் பணிபுரிந்த இவர் மலையகத்தில் வாழ்நாளில் கூடிய காலம் பணிபுரிந்தார்.

*அனுபூதியர் தொடர்பு*

நம் நாட்டில் அவதரித்த விபுலானந்த அடிகள், யோக சுவாமிகள், சித்தானைக் குட்டிச் சுவாமிகள் ஆகிய அனுபூதியாளர்களுடன் ஆத்மஜோதி ஐயா அவர்கள் பழகிப் பெற்ற அனுபவங்கள் பல. இந்திய நாட்டின் ஆத்மீகத் தலைவராகத் திகழ்ந்த ரமண மகரிஷியின் ஞான தரிசனமும் பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா, சுவாமி ராமதாஸ், அன்னை கிருஷ்ணாபாய், சுவாமி சிவானந்தர் ஆகியோரின் அருட் பார்வையும்; சுத்தானந்த பாரதியார், பித்துக்குளி முருகதாஸ் போன்றோரின் நட்புறவும் இவரது சமய சமூகப் பணிகளுக்கு ஒளியூட்டின.

காலத்திற்குக் காலம் இவர் மேற்கொண்ட இந்திய திருத்தல யாத்திரைகளின்போது கேதாரநாத், பத்திரிநாத், துங்கநாத் போன்ற திருத்தலங்களைத் தரிசிக்கும் பேறு கிடைக்கப்பெற்றார்.

*சமய நூல்கள்*

இவர் எழுதிய நூல்கள் அகர வரிசையில் வருமாறு:-
1. இந்தோனேசியாவில் இரண்டு வருடங்கள், 2. இலங்கையில் ஓர் இல்லற ஞானி; 3. இளைஞருக்கு ஏற்ற இந்தோனேசியக் கதைகள், 4. ஈழத்துச் சித்தர்கள், 5. ஏழாலை, 6. கந்தனே கலியுகக் கந்துக் கண்கண்ட தெய்வம், 7. சிவபால யோகேஸ்வரர், 8. தத்துவக் கதைகள், 9. திருமுறைச் செல்வம், 10. திருமுறைக் காட்சி, 11. நிழலின் பின்னே மனிதன், 12. பன்னிரு மாத நினைவுகள், 13. மாணவருக்கு ஏற்ற மாண்புறு கதைகள், 14. முப்பெருஞ் சித்தர்.

இவற்றுள் தத்துவக் கதைகள், ஏழாலை, ஈழத்துச் சித்தர்கள், கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் ஆகியவை இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல்களாகும்.

*ஞானப் பார்வை*

அன்னார் சர்வதேச ஆன்மிக மாநாடுகளில் கலந்துகொண்டு அருளுரையும் பேருரையும் ஆற்றியுள்ளார் அவர் பங்கு பற்றிய மாநாடுகள்:-

★ ஸ்ரீசங்கராச்சார்யசுவாமிகள் நடத்திய இந்து சமய மாநாடு.

★ அகில உலக இந்து மாநாடு கோவை, கோயம்பூர், சென்னை, மதுரை, இலங்கை கண்டா போன்றன குறிப்பிடத்தக்கன.

ஈழநாட்டுத் தமிழறிஞர்கள் தமிழகத்துத் தமிழறிஞர்களுக்கு நிகராக நின்று சைவத்தையும் தமிழையும் காத்தவர்கள் என்பது அனைவரும் ஏற்ற உண்மை. சென்ற ஆண்டு தஞ்சாவூரில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டிற்கான அழைப்பினை ஐயா நிராகரித்து விட்டார். செந்தமிழ் ஆராய்ச்சி செய்ய வேண்டுமானால் அது தமிழீழத்தில் தான் இனி

சி. சக்திகிரீவன்
செயலாளர்
இந்து சமயப் பேரவை

நடைபெற வேண்டுமென்பது ஐயாவின் முடிந்த முடிபு. இம் மாநாட்டிற்கு சென்ற நம் நாட்டுத் தமிழ்ப் பேரறிஞர்கள் புறக்கணிக்கப்பட்டமை அவரது ஞானப் பார்வைக்குச் சான்றாகிறது.

இந்துக்களும் இந்து ஸ்தாபனங்களும் ஒரு தலைமையின் கீழ் இயங்கிச் சமய சமூகப் பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டுமென்பதில் ஐயா அவர்கள் தளராத நம்பிக்கை கொண்டிருந்தார். இந்த எண்ணத்தை இந்துசமயப் பேரவை மூலம் நிறைவேற்றி வைக்க ஐயா அவர்கள் சலிக்காது உழைத்தார்.

இந்த சமயப்பேரவையால் நடத்தப்படும் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தையும் இது போன்று தமிழீழத்திலுள்ள ஏனைய இல்லங்களையும் பேணி வளர்க்க வேண்டுமென்பது அவர் எண்ணம். அவரது இக்கனவுகள் நனவாக முன்னர் அவர் எம்மை விட்டுச்

[7 ஆம் பக்கம் பார்க்க]

## அஞ்சலிச் செய்தி

### தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர்

தேச விடுதலையில் தமிழினதும் தமிழ் மக்களினதும் தேசப்பற்றுணர்வுள்ள வாழ்விற்கும் அவர்கள் தம் சுதந்திர செயற்பாடுகளை வகைப்படுத்தி மக்கள் மனங்களில் நிறைந்த தேசியப்பற்றுணர்வுள்ள சமய சமூக சேவையாளனை இன்று எமது தேசம் இழந்துவிட்டது.

தேசியத்திலிருந்தும் தேசத்தில் இருந்தும் சமயத்தை வேறுபடுத்தி முரண்பாடுகளை உருவாக்கி மக்களின் தேசியப் பற்றுணர்வை மழுங்கடிக்க முனைபவர்கள் மத்தியில் சமயப் பற்றுணர்வுடன் தேசியப்

— சு. ப. தமிழ்ச்செல்வன்

பற்றுணர்வையும் இணைத்து மேலானதாக தன்னில் வளர்த்துக் கொண்டு அதற்காகவே இறுதி வரை வாழ்ந்து காட்டிடிய பெரியாரின் வாழ்க்கை அர்த்தப் பாடுகள் நிறைந்த ஒன்றாகும்.

இலவாத அரசின் திட்டமிட்ட செயற்பாடுகளின் மத்தியில் தமிழ் மக்களின் உன்னதமான தியாகத்தின் உச்சத்தில் உயிர் பெற்ற நம் தேசிய

[7 ஆம் பக்கம் பார்க்க]

### பேரவையின் பதில் தலைவர்

எமது பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய பேரவைத் தலைவர் ஆத்மஜோதி ஐயா அவர்கள் கனடாவில் சிவபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். ஈழத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் சென்று தமிழ்ப் பணியும் சைவப்பணியும் மேற்கொண்ட அன்னார் மேலை நாடுகளுக்கும் சென்று இப்பணிகளை மேற்கொண்டார்.

நாவலர்பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான திருத்தலங்களுக்குப் பாதயாத்திரை மேற்கொண்டதுடன் அங்கெல்லாம் பிரசங்கங்கள் செய்தும் சைவ மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.

— ஆ. மகாலிங்கம்

கோயில்களில் நடைபெறும் ஆகம விதிகளுக்கு முரணான செயற்பாடுகளை நீக்கி அங்கு பக்தியும், அன்பும் மிளிர வேண்டுமென்று வலியுறுத்தினார்.

இந்துக்கள் தர்மப் பணிகளில் ஈடுபட வேண்டுமென்றும் கோயில்கள் இதற்கு ஏற்ற கேந்திர நிலையங்களாகச் செயற்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

இந்துக்களின் நலன்களைப் பேணுவதற்கும் இந்துஆலயங்களை ஒருங்கிணைத்து அவற்

(7ஆம் பக்கம் பார்க்க)

மலருக்கு நீர் தந்தோர்:

✶ குறிஞ்சி மருந்தகம் திருநெல்வேலி கிளை: ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
✶ கோல்டன் T. V. நிறுவனம் 2 A, அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.
✶ V. S. B. குறூப் 266 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
✶ இளவரசி சேலை சோலை 67, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

(விளம்பர இல. சி-2482)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனடி இணைந்த
# 1ஆம் ஆண்டு நினைவு

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 03 |  | 09 |
| — | | — |
| 07 | | 10 |
| — | | — |
| 1937 | | 1994 |

## திருமதி இராசையா ஊரியம்மா
[பொன்மணி]

ஓராண்டு ஓடிற்றம்மா உலகை நீ விட்டகன்று
பல்லாண்டு மறைந்தாலும் மறப்போமோ
நின் திருவுருவை
சீராட்டிப் பாராட்டி செல்வமாய்
எமை வளர்த்தாய்
வீட்டின் தலைவியாய் விளக்கேற்றி வைத்திருந்தாய்
பாசமறுத்து இறைவனடி சேர்ந்ததேனோ?
நேசம் மறப்போமோ உலகம் நிலைக்குமட்டும்
இறைவனடி இணைந்து நிறைவுடன் நீ வாழ
நிறைமனதாய் இறைஞ்சுகின்றோம்
இறைவன் தாள் வணங்கி

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை 09 – 10 – 1995 திங்கட்கிழமை காலை 6–30 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கற்திருப்பலி நடைபெறும். இதில் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து எமதில்லத்தில் நடைபெறும் செபவழிபாட்டிலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

அன்ரன் இல்லம்,
28/1 புதுவீதி,
கொய்யாத்தோட்டம்.

(38869)

# கோப்பாய் - நீர்வேலி மக்கள் இடம்பெயர்வு

நிலாவரை, ஈவினை, ஆவரங்கால் பகுதிகளில் இருந்து புதன் அதிகாலை முதல் இடம் பெற்றுவரும் ஷெல் வீச்சுக்களினால் உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தென்மராட்சிப் பகுதிகளை நோக்கியும் யாழ்ப்பாணத்தை நோக்கியும் பெரும் எண்ணிக்கையில் இடம் பெயர்ந்தனர்.

தொடர்ந்து ஷெல்வீச்சுக்கள் நடைபெறுவதனால் இப் பகுதியில் உள்ள மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளனர்.

# கட்டாக்காலி கால்நடைகளால் பயிர்கள் அழிவு

சரசாலை, மட்டுவில் பகுதி தோட்டங்களில் உள்ள பயிர்களைக் கட்டாக்காலியாக அலையும் கால்நடைகள் அழித்து வருவதாக இப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

வலி. கிழக்குப் பகுதியிலிருந்து வரும் கால்நடைகளே இவ்வாறு பயிர்களை அழித்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (க-117)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

## விஞ்ஞானபீடம்
### வெற்றிடம் நிரப்பும் பட்டியல் — பௌதிக கற்கை நெறி 1994/95

வெற்றிடம் நிரப்பும் பட்டியல் மூலம் பௌதிக விஞ்ஞான கற்கை நெறி 1994/95ற்கு தெரிவு செய்யப்பட்டதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் 20 – 10 – 1995ற்கு முன்னதாக தம்மைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் உள்ள பட்டியலில் தமது பெயர் உள்ளதா எனப் பார்த்தறியலாம்.

— பதிவாளர்.

(இ-2435)

# 91-ம் நாள் நினைவஞ்சலி

| அன்னை மடியில்: | | அரக்கன் அழிப்பில்: |
|---|---|---|
| 06 |  | 10 |
| — | | — |
| 03 | | 07 |
| — | | — |
| 1980 | | 1995 |


அமரர்
## கணேசவேல் தேவகணேசன்
[ஸ்கந்தவரோதயக் கல்லூரி, 10 ஆம் ஆண்டு மாணவன்]

எங்கள் செல்வம் ஏற்றமிகு நிதியம்
சிங்கள அரசின் சீரற்ற செயலால்
சிதைவு கண்டு சிந்தை கலங்கி
கால மெல்லாம் கண்ணீர் வடிய
கருணையற்ற கடவுள் செயலில்
கற்பனை எல்லாம் கனவாகியதோ!
தேவா! நீ! தேவனடி சேர்ந்தாய்
ஆவலுடன் நாம் அணைக்கும் நாள் எப்போ?
ஆத்ம சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்.
ஆ. சி. கணேசவேல், சமாதான நீதிவான்
உபதபாலதிபர், கந்தரோடை

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(38905)





## இரு மாதங்களுக்கு ஒரு முறை
### 10 பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்கு காத்திருக்கின்றன

முதலாவது சீட்டிழுப்பு ஒக்டோபர் 16 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்

பின்வரும் இடங்களில் வெற்றுப் போத்தல்களை ஒப்படைத்து உங்கள் அதிர்ஷ்டத்தை பரீட்சித்துப் பாருங்கள்

1. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 2. சபாரீஸ் – சண்டிக்குளி 3. பேப்பர் சொப் – இருபாலை 4. சுபாஸ் பேக் கவுஸ் நெல்லியடி 5. மாருதி – வல்வெட்டித்துறை 6. வாசுகி ஸ்ரோர்ஸ் – சண்டிக்குளி 7. நியூ வசந்தா – சின்னக்கடை 8. தாஸ் ஸ்ரோர்ஸ் – கலாசாலை வீதி, திருநெல்வேலி 9. விநாயகர் கல்வியங்காடு 10. ஜெயசக்தி பார்மஸி – மருதனாமடம் 11. யாழ்றன் ஸ்ரோர்ஸ் – கொக்குவில் 12. S. R. மகேந்திரன் ஸ்ரோர்ஸ் – கோண்டாவில் 13. அம்பிகை வர்த்தக நிலையம் – திருநெல்வேலி 14. அன்புக் களஞ்சியம் – ஆஸ்பத்திரி வீதி 15. வேல் களஞ்சியம் – தட்டாதெரு 16. செல்வசந்நிதி ஸ்ரோர்ஸ் – வல்வெட்டித்துறை 17. தரனி – திருநெல்வேலி 18. நியூகோ ரேடேஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 19. ராஜேஸ்வரி – சாவகச்சேரி 20. யூனியன் பேக் ஹவுஸ் – சாவகச்சேரி 21. செல்வராசா ஸ்ரோர்ஸ் – பருத்தித்துறை.

# ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

இல. 14, சீனியர் லேன், யாழ்ப்பாணம்.

([illegible])


# 91-ம் நாள் நினைவஞ்சலி



## செல்வி ஜெயதா நவரட்ணம்
[சிவா]

(யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட (உயிரியல் பிரிவு) இறுதி ஆண்டு மாணவி)

அன்னையின் அணைப்பு: 25 – 01 – 1971
அரக்கரின் அழிப்பு: 10 – 07 – 1995

ஆடி, ஓடித் திரிந்தவளே
ஆடி மாதம் மறைந்தனையோ?
கல்விக்கும் ஜெயதாவை
கனிவாய் நாமும் எதிர்பார்த்தோம்
கலைகள் பலவும் கற்றே நீ
கருத்துடன் வாழ முன்னெடுக்கும்
வேளை தனை நாம் எண்ணி
வேகமாய் நாமும் எதிர்பார்த்தோம்
அந்தோ "சிவாவே" எமைவிட்டு,
அரக்கன் அழித்தான் உனையன்றோ?
உன் வாழ்வும் வளமும் அழிந்ததம்மா
எம் உயிரும் உளமும் வெந்ததம்மா!

அன்பின்
அப்பா, அம்மா, அண்ணா,
அண்ணி அக்கா. மற்றும்
உறவினர், நண்பர்கள்.

கந்தரோடை,
சுன்னாகம்.

(38901)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் களத்தில் குதிக்காமல் ரஜனி கடைசி நேரத்தில் பின்வாங்கியது ஏன்?

அன்று சிவாஜிராவ் ஆக இருந்த — இன்றைய ரஜனி காந்தை — தனது "அபூர்வ ராகங்கள்" படத்தில் சிறிய கதாபாத்திரத்தை வழங்கிய தன் மூலம் தமிழ் சினிமா உலகில் நடிகராக அறிமுகப் படுத்தினார். கே. பாலச்சந்தர். மீண்டும் "மூன்று முடிச்சுகள்" படத்தில் உபிரோட்டமுள்ள வில்லனாக அறிமுகப்படுத்தி ரஜனியின் நட்சத்திர அந்தஸ்து உயர்வதற்கு கால்கோள் இட்டவரும் பாலச்சந்தரே.

தம்மை சினிமாவில் — வாழ்க்கையில் — பிரபலமாக்கிய தமது குருவான கே. பாலச்சந்தருக்கு நன்றிக் கடன் செலுத்தும் வகையில் அவரது நிறுவனத் தயாரிப்பான "முத்து" படத்தில் நடிப்பதற்கு இசைந்து, நடித்து வருகிறார் ரஜனி.

தமிழக அரசியலில் ரஜனி குதிப்பாரா என்ற சர்ச்சையும் சூடும் ஒரு புறம் கிளம்ப, மறுபுறத்தில் "முத்து" படத்தின் படப்பிடிப்பு நடவடிக்கைகளில் வலுமும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார் ரஜனி. தீபாவளிக்கு "முத்து" படம் வெளியாவதை உறுதி செய்யும் வேகத்தில் செயல்பட்ட ரஜனி, அதே சமயம் வேறு எந்தப் புதிய படத்துக்கும் ஒப்பந்தம் செய்ய இணங்கவில்லை.

இதனால் தமது குருநாதர் பாலச்சந்தரின் நிறுவனப் படத்தை அவசர அவசரமாக முடித்துக் கொடுத்து விட்டு, முழுமூச்சில் அரசியலில் இறங்க ரஜனி முடிவு செய்து விட்டார் என்றே பேசப்பட்டது. ஓரளவுக்கு ரஜனியும் அந்த முடிவிலேயே இருந்தார். ஆனால் கடைசி நேரத்தில் அரசியலில் குதிக்கும் முயற்சியிலிருந்து அவர் வெற்றிகரமாக பின்வாங்கினார். இந்த பின்வாங்கலுக்குக் காரணம் என்ன?

பலம் இல்லாத பப்பாளி மரத்தில் ஒருவனை ஏற்றுவதற்கு உற்சாகப்படுத்தி, மரத்துடன் அவனை முறிந்து விழச் செய்வதற்கு ஊக்கப் படுத்துவது போல —

அரசியல் பப்பாளியில் தன்னை ஏற்றி, அடியோடு முறிந்து விழச் செய்வதற்கு தமிழகப் பத்திரிகைகளும், தமிழக எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் ஒரே குரலில் "ஜால்ரா" போட்டு உற்சாகப்படுத்தியதை தக்க தருணத்தில் ரஜனி புரிந்து

## பதுங்கும் சுப்பர் ஸ்டார்!

கொண்டார்.

தமிழக அரசியலில் காட்டு தர்பார் நடத்தும் ஜெயலலிதாவை அரசியலில் இருந்து விரட்டியடிக்கும் முயற்சியில் தன்னைப் பலிக்கடா ஆக்குவதே இந்தக் கட்சிகளினதும் பத்திரிகைகளினதும் நோக்கமே தவிர, தமிழக அரசியலில் தனக்கு நிரந்தர இடம்பெற்றுத் தருவதல்ல என்பதும் அவருக்குப் புரிந்தது.

தமிழக அரசியல் நிலையை அவர் சரியாக எடைபோட்டார்.

எம். ஜி ஆர்., ஜெயலலிதா, டி. ராஜேந்தர், பாக்கியராஜ், சிவாஜி என சினிமாவிலிருந்து தமிழக அரசியலில் குதித்தவர்கள் பலர்.

ஆனால் அவர்களில் முதல் இரண்டு பேரைத் தவிர மற்றவர்களால் அரசியல் சகதியில் நீந்தி கரைசேற முடியவில்லை; அமுங்கிப் போனார்கள்.

வெளிமா நிலங்களிலும்

### தமிழக மடல்

ஹிந்தி சினிமாவில் கொடி கட்டிப் பறந்த அமிதாபச்சன் முதல் என். ரீ. ராமராவ் வரை பலரின் சரிதங்கள் தெரிந்தவையே.

இவர்கள் அனைவரிலும் சினிமாவிலிருந்து நேரடியாக முழுநேர அரசியலுக்குக் குதித்து, சினிமா ஆதரவைப் பயன்படுத்தி தேர்தலில் வென்றவர்கள் இருவர்.

ஒருவர் எம்.ஜி. ஆர். மற்றையவர் ராமராவ்.

*எம்.ஜி. ஆர்*

எம். ஜி. ஆர் முழுநேர அரசியலுக்குக் குதிப்பதற்கு முன்னர் நீண்டகாலம் அரசியலில் இருந்தவர்; பல தேர்தல் களங்களைக் கண்டவர்: தனிக் கட்சி ஆரம்பிப்பதற்கு முன்னரே அரசியலில் காலூன்றியவர். தனிக்கட்சி ஆரம்பித்த கையோடு ஒரு தொகுதியில் மட்டுமே—திண்டுக்கல்லில் மாத்திரமே—தேர்தலை எதிர் நோக்கியவர்.

தனிக்கட்சி ஆரம்பித்து— அ. தி. மு. கவை ஸ்தாபித்து — ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரே — தமது கட்சியை மாநிலத்தில் நன்கு வேரூன்றச் செய்த பின்னரே—பொதுத் தேர்தலைச் சந்தித்தவர்.

அதனால் தமது இறுதிக் காலம் வரை கட்டுக்கோப்பாக கட்சியையும் ஆட்சியையும் தம் முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருக்க அவரால் முடிந்தது.

முழுநேர அரசியலில் குதித்த பின்னர் தம்மை வேறு யாரும் வழி நடத்த அவர் அனுமதிக்கவில்லை. தாமே முடிவுகளை எடுத்தார்; அவற்றைச் செயற்படுத்தினார்.

*ராமராவின் கதை*

ஆனால் ராமராவின் கதை வேறு. 1981இல் அரசியலில் குதித்து தெலுங்கு தேசம் கட்சியை ஆரம்பித்து — சில மாதங்களுக்குள்ளேயே — பொதுத்தேர்தலை சந்தித்து ஆந்திர முதல்வரானவர் ராமராவ்.

கட்சியைப் பலப்படுத்த முன்னர் ஆட்சியைப் பிடித்த ராமராவால் நிலையாக ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள முடியாமல் போனது நாம் பார்த்த கதை.

எவ்வளவு மக்கள் செல்வாக்கு இருந்தாலும் — கட்டுக்கோப்பான கட்சியை ஸ்தாபிக்காவிட்டால் — அரசியல் சூறாவளிக்கு நின்று பிடிக்க முடியாது என்பதை ராமராவைப் பார்த்து உணர்ந்து கொண்டார் ரஜனி.

1981 இன் நடுப்பகுதியில் புதிய கட்சியை ஆரம்பித்த ராமராவ் 1982 இல் ஆந்திர முதல்வரானார். ஆனால் 1983 இல் அவரது கட்சிக்குள் இருந்து பாஸ்கரராவ் தலைமையில் கிளம்பிய பூகம்பம் அவரை மண் கவ்வ வைத்தது.

மீண்டும் இடையில் சில காலம் ஆட்சிக் கட்டிலில் இருந்த ராமராவ்—மிக அண்மையில்தான் என்றுமில்லாதவாறு பெரும்பான்மையுடன் திரும்பவும் ஆட்சியைப் பிடித்தார்.

ஆனால் தன் கட்டுப்பாட்டில் இல்லாத தனது கட்சியாலும், வேறு நபர்களின் (இரண்டாம் மனைவி சிவபார்வதியின்) வழிநடத்தல்களுக்கு உள்ளானதாலும், தனது சொந்த மகன், மருமக்களினால் அரசியல் வனவாசம் புக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டார் ராமராவ்.

*இரண்டு முன்மாதிரிகள்*

எம். ஜி. ஆர், ராமராவ் ஆகிய இரண்டு முன்மாதிரி நபர்களில் இருந்து ரஜனி படித்துக் கொண்ட பாடங்களே, அரசியலில் தற்போது குதிக்கும் எண்ணத்திலிருந்து அவரைப் பின் வாங்கவைத்தன.

சினிமா கவர்ச்சியை வைத்து அரசியலில் குதித்து வெற்றி பெற்றாலும் அதனைத் தக்க வைத்துக் கொள்ள —

★ கட்டுக்கோப்பான ஒரு கட்சி தேவை.

★ சுயாதீனமாகச் சிந்

### தொகுப்பு: கவி

தித்து— துணிச்சலுடன்முடிவு எடுக்கும் மனப்பக்குவம் தேவை — என்பதை ரஜனி புரிந்து கொண்டார்.

தமிழக சட்டசபைக்கு தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் நான்கே மாதங்கள் தான் உள்ளன.

இந்தக் கால அவகாசத்துக்குள் முன்பின் அரசியல் சகதியைச் சந்தித்திராத தான், ஒரு புதிய கட்சியை அமைத்து மாவட்டங்கள், தொகுதிகள், பட்டினங்கள், கிராமங்கள் தோறும் கட்சி அமைப்புக்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாகரன் வழிநடத்தலில் பெண்விடுதலைப் போரும் முன்னேறுகிறது

*ஒக்டோபர் 10 ஆம் திகதி தமிழீழப் பெண்கள் தினமாகும். அதனை ஒட்டி இக் கட்டுரை இங்கு பிரசுரமாகுகிறது.*

ஆண்டு தோறும் உலகளாவிய ரீதியில் மார்ச் 8 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் சர்வதேச மகளிர் தினத்திற்குப் புறம்பாக இந்த ஆண்டு முதல் தமிழீழ பெண்கள் தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னொரு போதும் இல்லாத வகையில், உலகின் கவனத்தை தம்பக்கம் ஈர்த்துள்ள தமிழீழப்பெண்களின்மேன்மையைக் குறிக்க தனியான ஒரு நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்விதத்திலும் மிகையானது அல்ல.

தமிழீழப் பெண்களின் இன்றைய எழுச்சியானது, தமிழீழத்தேசிய விடுதலை போராட்டத்தில் புலிகள் மகளிர் அமைப்பின் வளர்ச்சியில் இருந்து என்றைக்குமே, எவ்விதத்திலுமே பிரித்துப் பார்க்க முடியாதது.

நாம் சார்ந்துள்ள ஆசிய சமுதாயமானது பண்டு தொட்டு இறுக்கமான பல மரபுகளால் தன்னைச் சுற்றி அழுத்தமான வேலிகளை போட்டுக் கொண்டு வாழ்ந்து வருகிறது.

அதிலும் குறிப்பாக எமது தமிழ்ச் சமூகம்... பழமைவாதிகளின் மூட நம்பிக்கைகளுக்குள்ளும் விதண்டாவாத கோட்பாடுகளுக்குள்ளும் தன்னைத் தொலைத்துக் கொண்டது.

ஆணாதிக்க மேலாண்மையும், பெண்ணின ஒடுக்குமுறையும் எமது பரம்பரைகளின் இரத்தத்தில் ஊறிய சங்கதிகள்

அவற்றிற்கு அமைவாகவே எமது கர்ண பரம்பரைக்

**-ஆதிரை-**

கதைகளும், இதிகாசங்கள், இலக்கியங்களும், சித்தாந்த வேதாந்தங்களும் இயற்றப்பட்டுள்ளன.

பெண்ணை எதையும் ஏற்கும் தெய்வமாக, பலியிறைப் பதுமையாக சமயலறைச்சேவகியாவே நடத்தி வந்தது எமது சமூகம்.

இந்த நிலையில்தான்— உலகெங்கும் பெண்கள் இன்னும் தமது அடிமைத் தளையில் இருந்து விடுபடாத நிலையில்தான்—சத்தமின்றி எமது தேசத்தில் பெண் விடுதலைக்கான முக்கிய [illegible] அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன; பெண்கள் மூலம் உயரிய சாதனைகள்நிலை நாட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

*பெண் விடுதலை இலக்குகள் எட்டப்படுகின்றன*

ஆம் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் வழிநடத்தலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மகளிர் படையணியினர் பெண் விடுதலை தொடர்பான சரியான இலக்குகளை எட்டிக் கொண்டிருக்கின்றனர்.

எமது தேசத்தின் விடுதலைக்காக பெண்கள் எப்போது போராடத் தொடங்கினார்களோ அன்றே எமது சமுதாயத்தில் புரையோடியிருந்த பெண் அடிமைத்தனத்திற்கு சாவு மணி அடிக்கப்பட்டது.

எமது நாட்டின் முழுமையான விடுதலையானது, பெண்ணினம் சுதந்திரம் பெறாமல் இடைக்கப் போவதில்லை என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஆரம்பகாலச் செயற்பாடுகளில் இருந்தே பெண்களையும் இணைத்தே செயல்படுத்தி வந்துள்ளது.

இங்கு [illegible] புலிகள் [illegible] [illegible] மாய் களமாடி வருகின்றனர்.

எமது விடுதலைப் போர் உலகளாவிய ரீதியில் கவனத்தை ஈர்ப்பதற்கு முக்கிய காரண கர்த்தாக்களாகப் பெண்புலிகள் திகழ்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் களப்பலியான முதலாவது பெண் வேங்கை லெப், மாலதி முதல் எதிரியின் கப்பலை வெடிகுண்டுடன் சென்று தகர்த்தெறிந்த கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி அதன் வழி தொடரும் பெண் புலிகள் ஒவ்வொருவரின் வாழ்வும், பெண் விடு

(7 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடி அரங்கு

மூத்தஅரசியல்வாதியான தொண்டமானை அண்மையில் கொழும்பில் சந்தித்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவர் "உங்களுக்குப் பின் இ. தொ. காவின் எதிர்காலம் என்ன?" —என்ற இக்கட்டான கேள்வியை நேரடியாகக் கேட்டு விட்டார்.

"அதுதான் கவலையாக இருக்கின்றது. நான் இன்னும் மூன்று நாலு வருடங்கள் இருப்பது கூட நிச்சயமில்லை அதற்கப்புறம் ஒருத்தரை ஒருத்தர் அடிச்சுக்கப்போறாங்க இ. தொ. கா. உருக்குலைந்திடும் என்று வருத்தமாக இருக்கிறது — என வேதனையோடு பதிலளித்தாராம் தொண்டா.

"அதற்காகத்தான் உங்களுக்குப் பின் உங்கள் பேரனை இ. தொ. காவின் தலைமைக்கு வாரிசாக வளர்க்கின்றீர்கள். போலும்!" — இது அந்தச் செய்தியாளர் தொண்டமானிடம் திருப்பிக் கேட்க நினைத்து கேட்காமல் மனதுக்குள் அடக்கிக் கொண்ட கேள்வி. அந்தக் கேள்வியை விட்டு விட்டு—

"உங்களுக்குப் பின் மலையகத் தமிழர்களின் ஏக தலைவராக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் வருவாரா?"— என்ற வினாவைத் தொடுத்தார் அச்செய்தியாளர் அதற்கு சீறிப் பாய்ந்து கொண்டு தொண்டா அளித்த பதில் என்ன?

அடுத்த அதிரடி அரங்கில் அந்தச் சுவையான பதிலைப் பார்ப்போம்.

— மின்னல் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கீழ்க்காணும் முகவரியில் (சோனரி) விற்பனைக்குள்ளது. 8 செல் 60 லோக்கட்ஸ் பற்றறியுடன் (120) ஏனைய விபரங்கள் நேரில் தொடர்பு: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/2427)

### தவறிவிட்டது

மகேஸ்வரி மயில்வாகனம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல: (435800114 V) தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகில், தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். C/o, பூபாலசிங்கம், சங்கரப்பிள்ளை றோட், ஆனைக்கோட்டை. (38894)

### மணமகள் தேவை

39 வயது, மிருகசீரிடம், 2ம் பாதம், குற்றமற்ற, பாவம் குறைந்த கணித ஆசிரியருக்கு மணமகள் தேவை, ஜாதகம், முழுவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் இல: 856 மே/பா உதயன். (38908)

### மணப்பெண்கள் தேவை

வயது 45. 43 (பட்டதாரி) இந்து வியாபாரிகள் தனியாக வாழ்பவர்களுக்கு தொழிலுள்ள அல்லது கல்வி அறிவுள்ள, களத்திர தோஷ ஜாதகமுள்ள மணப்பெண்கள் தேவை. பட்டதாரி மணமகனுக்கு வெளிநாடு செல்லக் கூடியவர் விரும்பத்தக்கது. முழுவிவரம் ஜாதகத்துடன் சுயமாக விண்ணப்பிக்கவும். இல. 855, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (38877)

### O/L கணிதம்

Distinction Credit பெறு பேறுடைய (2 மாதங்களில்) இதுவரையும் பெறுபேறடையாதவர்களுக்கும், அனுபவமுள்ள B. Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (38892)

### இறைச்சிக்கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7.00 தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல, உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப்பலகையுண்டு. இல: 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (38889)

### இலக்கணம்

புதிய பாடத்திட்டத்திற்கு அமைய ஒத்த கருத்துச் சொற்களும், எதிர்கருத்துச் சொற்களும் ஆண்டு 5, 6, 7, 8, 9, 10 மாணவர்களுக்கு. தொகுப்பு: வெ. நவமோகன். விற்பனையாகின்றது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-2399)

### வீடு வாடகைக்கு

நடுத்தர வயது தம்பதிகளுக்கு 6 மாத தவணைக்கு ஒரு சிறிய அனெக்ஸ் அல்லது ஒரு அறை வாடகைக்கு தேவை. திருநெல்வேலி, கல்வியங்காடு பகுதிகள் விரும்பத்தக்கது. வி. இல. 854, மே/பா உதயன். (38777)

### சோதிடம்

சாதகம் கணித்தல், எதிர்காலப் பலன்கள், விவாகப் பொருத்தம், சுபமுகூர்த்தம், திருமணத் தடைக்குப் பரிகாரம். வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் நண்பகல் வரை. கு. சிவபாலசுந்தரம் பிள்ளை, இல. 53/5 அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். (38862)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 03 — 1968

மறைவு: 19 — 09 — 1994

**திருமதி**

## இரெட்ணேஸ்வரி (விஜி) குகநாதன்

**திதி: 08 – 10 – 1995**

உயிர்நீத்த உங்கள் நினைவால் – எமக்கு
உயிரிருந்தும் உணர்வில்லை
உணவில் உறக்கத்தில் – எங்குமே
உங்கள் நினைவலைகள்
உறுதியற்ற உடலுடன்
உறக்கமற்று அலைகின்றோம்.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;
கணவன், பிள்ளைகள்,
உறவினர்கள்.

இராஜலக்ஷ்மி விற்பனையகம்,
3ம் குறுக்குத் தெரு,
யாழ்நகர். (38893)

---

# சபிண்டீகரண அழைப்பும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்



**அமரர்**

## பொன்னம்பலம் காசிலிங்கம்

தோற்றம்: 22- 07 - 1924 (திருநெல்வேலி)

மறைவு: 09 - 09 - 1995 (கந்தர்மடம்)

எங்கள் குடும்ப நந்தா விளக்கே;

உங்களின் சொல்லிலும் செயலிலும் அன்பையும், பண்பையும், பணிவையும் கற்றறிந்தோம்.

தங்கள் இல்லறவாழ்வுத் தர்மத்தில் இவ்வுலக வாழ்க்கைப் பயிற்சி பெற்றோம்.

தந்தை காற்றாற்றும் உதவியெல்லாம் செய்து மனம் மகிழ்ந்து எம்மோடு ஒன்றிணைந்து வாழ்க்கை வழிகாட்டியாக வாழ்ந்த தங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவன் திருவருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

09 - 10 - 1995ஆம் திகதி திங்கள் எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் எம்மோடு கலந்து பிரார்த்தனை செய்யும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகிய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

184, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (38899)

---

# O/L இலவச மீட்டல் வகுப்பு

## ஆரம்பம்: 10 - 10 - 1995

- ★ யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களால் ஒருங்கிணைந்து இலவசமாக நடத்தப்பட உள்ள இவ் வகுப்பு

கந்தர்மடம்
**யூனிவேர்சல் கல்வி நிறுவனத்தில்**
நடைபெறும்.

- ★ வகுப்புகள் மாணவர்களின் வசதிக்கேற்ப பகல் முழு நேர மாலை, இரவு நேர வகுப்புகளாக நடைபெறும்.
- ★ 09 — 10 — 1995 (திங்கள்) இன் முன்னர் பெயர்களைப் பதிவு செய்யுங்கள்.

## யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி-2429)

---

# 90-ம் நாள் நினைவஞ்சலி

## அமரர் கணேசவேல் தேவகணேசன்

அகால மரணமடைந்த
எங்கள் கல்லூரி மைந்தன்
**அமரர் கணேசவேல் தேவகணேசனின்**
(10ஆம் ஆண்டு மாணவன்)

90ஆம் நாள் நினைவஞ்சலியைச் செலுத்தும் இச் சமயத்தில் ஆறாத்துயரில் உள்ள அவருடைய பெற்றோருக்கும், சகோதரருக்கும், ஸ்கந்தா சமூகத்தினரின் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவருடைய ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்,
ஆசிரியர் அல்லாத அலுவலர்,
மாணவர்.

யா/ஸ்கந்தவரோதய கல்லூரி,
கந்தரோடை,
சுன்னாகம். (சி-2487)

---

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வன்**

## சிறிஸ்கந்தராசா கோபிகன்

(ஆண்டு 8 மாணவன், கொக்குவில் இந்துக்கல்லூரி)

ஆண்டவன் படைப்பு: 08 — 09 — 1982

அநியாய அழிப்பு: 10 — 07 — 1995

கோபிகனே, மகனே, எம் குலக்கொழுந்தே
ஆவி துடிக்குதையா! ஆறமுடியவில்லை
பாவிகளின் குண்டு உந்தன் பொன்னுடலைத்
துளைத்ததுவோ!
தேம்பியழுகின்ற எங்கள் கண்ணீரை அறியாயோ!
கோலமுறுவலுடன் உன் கமல விழி மலர
மீண்டுமொருமுறை எம் கண்முன்னே தோன்றாயோ!

உன் சிந்தனையில் உயிர்வாழும்;
அப்பா, அம்மா, அண்ணர்,
தங்கை, அம்மம்மா, சித்தப்பாமார்,
மாமன்மார், உற்றார், உறவினர்.

உப தபாலகம்,
உடுவில். (38890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஐ. நாவில் கதிர்காமர்

வடக்கு - கிழக்கில் அரசாங்கம் போர் நடத்துவது எதற்காக?

அரசாங்கத்தின் உண்மையான காரணம் —நோக்கம் — ஒன்றுதான். தமிழ் மக்களை இன அழிப்புச்செய்து தனக்கு விருப்பமான, சிங்களவருக்குச் சாதகமான ஒரு தீர்வை தமிழ் மக்கள் மீது திணிப்பதுதான் அந்த நோக்கம்.

ஆனால் அரசாங்க அமைச்சர்களும், அவர்களைச் சார்ந்த அதிகாரிகளும் வேளைக்கு வேளை, ஆளுக்கு ஆள் ஒவ்வொரு பொய்யான காரணங்களைக் கூறுகிறார்கள்.

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதே போரின் நோக்கம் என்று ஆரம்பத்தில் சொன்னார்கள்.

தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிப்பதற்காகவே போர் நடத்தப்படுகிறது என்று பின்னர் கூறினார்கள்.

இவை யாவும் சுத்தப் பொய்கள்; உலகத்தை ஏமாற்றுவதற்கான பச்சைப் பொய்கள் என்று எங்களுக்குத் தெரியும். உலகத்துக்கும்— வெளி நாடுகளுக்கும் — இப்போது அரசின் பொய் மெது மெதுவாக விளங்கிக் கொண்டு வருகிறது.

இதனை அறிந்த அரசாங்கம் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்துக்கு அனுப்பிப் பொய் பேச வைத்திருக்கிறது!

வடக்கு—கிழக்கு மக்களின் உயிரைக் காப்பதற்காகவே அரசு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது என்று அப்பட்டமான பொய்யையும் அவிழ்த்து விட்டிருக்கிறார்.

வடபகுதி மக்களுக்கு அரசாங்கம் ஒழுங்காக உணவுப் பொருள்களை அனுப்பி வருகிறது. வடக்கில் உள்ள மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை, சேவைகளை எல்லாம் குறைவின்றி செய்து வருகிறோம்— என்பன அவர் கூறிய ஏனைய பொய்கள்

வடக்கு - கிழக்கு வாழ் இளைஞர்கள், சிறுவர்களின் நலனில் அரசு பெரும் அக்கறை கொண்டிருப்பதாகவும்—

போரின்போது மக்கள்— சிவிலியன்கள்—தரப்பில் உண்டாகும் உயிர்ச் சேதம் மற்றும் பாதிப்புகளுக்கு போராளிகளே பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும்—

அரசாங்கத்தின் கொடுமைகளையும், அட்டூழியங்களையும் மறைத்துப் பேசியிருக்கிறார்.

அரசாங்கப் படைகள் நடத்தும் எறிகணை, குண்டு வீச்சுக்களினால்தான் வடக்கில் பொதுமக்கள் சாகிறார்கள் —

நாவற்குழியிலும், ஏனைய இடங்களிலும் பாடசாலைகள் மீது குண்டு போட்டும், எறிகணை வீசியும் சிறுவர்களைக் கொன்றது யார்? — என்று ஐ. நா. வில் பதிலடி கொடுப்பதற்கு தமிழர் தரப்பில் எவருமில்லை என்பதனை அறிந்து தான், இவ்வாறெல்லாம் கதிர்காமர் விழுங்கிக் கக்கியிருக்கிறார்.

ஐ. நாவில் ஈழத் தமிழர்களுக்கு ஒரு பார்வையாளர் பதவி இருந்தால் கதிர்காமரால் இளகிய இரும்பைக் கண்ட தொழிலாளி போல இப்படித் துள்ளித் துள்ளிப் பொய் சொல்ல முடியுமா?

அதற்கான தேவை அவசியமாகி வருகிறது. இது குறித்த சிந்தனையும், முயற்சியும் தேவை.

# தலைவர் பிரபாகரன் வழி நடத்தலில்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் பாதையில் ஒவ்வொரு மைல் கற்கள் ஆகும்.

மெத்த வளர்ந்து விட்டதாகக் கூறும் மேற்குலகில் கூட பெண்கள் எவரும் சாதிக்காத, எண்ணியும் பார்க்காத சாதனைகளை இங்கு எமது சம காலத்தில் பெண் புலிகள் மூலம் நாம் தரிசித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆண்டுக்கொரு முறை கூடி ஒப்பாரி வைத்து கோஷமிட்டு இரண்டொரு தீர்மானங்கள்... அதற்கமைவாகப் பிரகடனங்கள் ...

இந்த வகையிலேயே உலகில் பெண் விடுதலை போய்க் கொண்டிருக்கிறது.

வெற்றுத் தோட்டாக்களே காதைக் கிழிக்கின்றன

இன்னமும் பெண் விடுதலை பற்றி சரியான சிந்தனை, செயற்பாடுகள் பிற தேசங்களில் தோன்றவே இல்லை.

பெண் விடுதலை, ஆணாதிக்கம் போன்ற கோஷங்களை எடுத்தவுடனேயே அநேகர் அதை ஆண்களுக்கு எதிரான கோஷங்களாகவே கொள்கின்றனர்.

இந்த இடத்தில் தான் நாம் விடுதலைப் புலிகள் தலைவரின் கூற்றை நினைவில் நிறுத்தல் நன்று.

### கருத்துப் போராட்டம்

"ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல; அது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டம். இந்தச் சித்தாந்தப் போராட்டம் ஆண்களின் மன உலக மாற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்" என்கிறார் தேசியத் தலைவர் பிரபாகரன்.

பெண் விடுதலை, பற்றிய மிகச் சரியான கருத்தை தலைவரின் இக்கூற்று தெளிவுபடுத்தி நிற்கிறது.

காலங்காலமாக எமது சமூகத்திலும், ஆண்களின் மனதிலும் விதைக்கப்பட்டுள்ள பெண் தொடர்பான இழிநிலைக் கோட்பாடுகள் அடியோடு களைந்தெறியப்பட்டாலே உண்மையான பெண் விடுதலை கிட்டும்.

உலகில் உள்ள அத்தனை துறைகளிலும் பெண்கள் காலூன்றியுள்ள இந்தவேளையிலும் அவர்களைப் பாலியல் ரீதியாக இம்சைப்படுத்துவதும், துச்சமாக மதிப்பதும் இன்னமும் விட்டுப்போகவில்லை.

ஆணுக்குப் பெண் எவ்விதத்திலும் சளைத்தவள் அல்ல என்று மேடைகளில் முழங்கிக் கொண்டிருப்பவர்கள் கூட, இன்னமும் தம்மனதில் மன மாற்றம் அடையாமலே இருக்கின்றனர்.

'வாய்ச்சொல் வீரர்களாகவே'' அவர்கள் திகழ்கிறார்கள்.

இன்று எமது பெண் போராளிகள் தம் மீது திணிக்கப்பட்ட எத்தனையோ தடைகளை, சமூக அடக்குமுறைகளைத் தகர்த்தெறிந்து சாதனை மேல் சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கும் வேளையிலும், எமது மண்ணில் சில மூலைகளில் இன்னமும் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சம்பள ஏற்றத் தாழ்வுகள், பதவி உயர்வுகளை வழங்குவதில் ஏற்றத் தாழ்வுகள் என்பன வேலைத் தலங்களிலே பெண்களுக்கு எதிராக நிலவத்தான் செய்கின்றன.

ஆன்மீகம் முதல் அறிவியல் வரை சட்டம், நிர்வாகம் எழுத்து, தொழில் நுட்பத்துறைகளில் எவ்வளவு தான்பெண்கள் தமது திறமைகளை நிரூபித்த பின்னரும் அவர்களுக்குரிய கௌரவம் மற்றும் தனித் தன்மைகளை ஏற்றுக்கொள்ளாத மன நிலையே சமூகத்தில் நீடிக்கிறது.

சீதனம் என்ற ரீதியில் பெண்களை இழிவுபடுத்தும் முறையும் எமது தமிழ்ச் சமூகத்தில் மற்றைய சமூகங்களை விட ஆழமாகப் புரையோடி உள்ளது.

### சீதனச் சட்டம் முக்கிய வெற்றி

இத்தகைய சீதன (மணக்கொடை) அளிப்பு முறையை விடுதலைப் புலிகள் சட்ட ரீதியாக தற்போது முற்றாகத் தடை செய்துள்ளனர்.

பெண் விடுதலை நோக்கிய பாதையில் நாம் எட்டிய முக்கிய வெற்றியாக இதனைக் கொள்ளலாம்.

வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைத்த விந்தை மிகு மனிதர் தலை குனிந்து விட்ட போதிலும் கிடுகு வேலிக்குள் முடங்கிக் கிடந்த காலம் பெரும்பாலும் முடிவுக்கு வந்து விட்ட நிலையிலும் பெண்களை அடிமையாகப் பார்க்கும் தாழ்பட்ட மன்பாடு இன்னமும் செத்து ஒழியவில்லை.

இத்தகைய அடிமை மனோபாவத்தை வளர்க்கும் — பெண்களை இழிவு படுத்தும் — சொற்றொடர்களும் பழமொழிகளும் எமது சமூகத்தில் நிறையவே உள்ளன.

பெண் அடிமை விலங்கொடித்து தலை நிமிர முயல்பவளை குட்டி அமர்த்த இவை துணை போகின்றன

இத்தகைய சொற்றொடர்களும், பழமொழிகளும் மனித குல அகராதியில் இருந்தே தூக்கி எறியப்பட்டு எரியூட்டி மீண்டும் எம் முடன் கலக்காமல் செய்யப்பட வேண்டியவை.

எது எவ்வாறாயினும் எமது தேச விடுதலைப் போராளது பெண்கள் மத்தியில் தமது சுய இருப்புப்பற்றிய விடுதலை உணர்வை விதைத்தே உள்ளது.

தலை குனிந்து, மாற்றான் முகங்காணாது நடந்த எமது நங்கையர்கள் கைகளில் கனரக ஆயுதம் ஏந்தி எதிரியை நேர் நின்று மோதி அழிப்பது இதற்கு சான்றாக அமைகிறது.

இதே போராட்டம் தேச விடுதலை ரீதியாக மட்டுமன்றி, பாலியல் ரீதியாகத் திணிக்கப்பட்டுள்ள மாற்றாந்தாய் மனப்பான்மைக்கு எதிராகவும் எமது பெண்களை சிந்திக்க வைத்துள்ளது.

### கனலும் பெண் விடுதலைத் தீ

இதனால் எமது சமுதாயத்தில் பரவலாக பெண் விடுதலைத் தீ கனன்று கொண்டிருக்கிறது.

பலவேறு துறைகளிலும், வீட்டிலும், வெளியிலும் தமக்குரிய கௌரவம், சுதந்திரங்களை உரியமுறையில் நிலைநிறுத்துவதில் பெண்கள் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர்.

உலக விடுதலை வரலாற்றில்— பெண் விடுதலை வரலாற்றில்— எமது தமிழீழப் பெண்களின் விடுதலையானது வித்தியாசமானதாக, ஏனைய சமூகங்களுக்கு முன்னோடியாக நிச்சயம் அமைய வேண்டும்.

எந்த வகையிலும் வரும் 21ஆம் நூற்றாண்டில் ஆணாதிக்கம் வலுப்பெற முடியாது.

ஏனெனில் புதிய உலகப் போக்குகளும், எல்லோருக்கும் உரிமைகள், எல்லோருக்கும் சுதந்திரம் என்ற கருத்தும் செயலும், வாழ்வியலில் முக்கிய அங்கங்களாகி வருகின்றன.

★

# அரசியல் களத்தில்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை உருவாக்கி பொறுப்பான பிரமுகர்களை நியமித்து தேர்தலைச் சந்திப்பது என்பது இயலாத காரியம் என்பதை ரஜனி விளங்கிக் கொண்டார்.

அரசியலில் ''ரஜனி அலை'' வீசி, தானும் தான் நியமிக்கும் வேட்பாளர்களும் பெரு வெற்றியீட்டினாலும் கூட. அடிப்படையில் வலுமிக்க கட்சி அமைப்பு ஒன்று இல்லாத நிலையில் கிடைக்கும் அத்தகைய ஒரு வெற்றி, நீண்டகாலத்துக்குத்தன்மையில் நிலைத்து நிற்காது என்பதையும் அவர் புரிந்து கொண்டார்.

சினிமாத் துறையில் ஓய்வு ஒழிச்சல் இன்றி வேலை செய்வதால் ஏற்படும் மனக் களைப்பால் குழம்புவர் ரஜனி, அத்தகைய சந்தர்ப்பங்களில் விடுமுறை எடுத்துக் கொண்டு இமயமலைக்கோ அல்லது ராகவேந்தர் சுவாமியின் தியானத்தையோ நாடி ஓடுபவர் அவர்.

அப்படிப்பட்ட தம்மால்— தமது மனத்தினால் — அரசியலில் ஏற்படக் கூடிய ஆழமான நெருக்கடிகளுக்கு ஈடு கொடுக்க முடியுமா? அதுவும் எம். ஜி. ஆரை விட செல்வாக்கால் — சொத்துக்களால் — உயர்ந்து நிற்கும் ஜெயலலிதா கொடுக்கப் போகும் நெருக்கடிகளுக்கு ஈடு கொடுக்க முடியுமா? — என்ற கேள்விகள் ரஜனியைச் சற்று பின்வாங்க வைத்திருக்கின்றன.

சினிமா இமேஜ்— மக்கள் செல்வாக்கு— ரசிகர் மன்றம் பலம்—

எதிர்க்கட்சிகள் சிதறிக் கிடப்பதில் ஜெயலலிதாவிற்கு எதிராக தனி ஒரு தலைமைத்துவம் இல்லாத வெற்றிடம்—

—இவ்வாறு ரஜனியை அரசியலுக்கு இழுத்துச் செல்ல பல காரணங்கள் காத்திருக்கின்றன. அதே போல பிரமுகர்களும் காத்திருக்கின்றார்கள்.

ஆனால் அவசரப்பட்டு இந்த வாய்ப்புகளை கெடுத்துக் கொள்ள ரஜனி தயாரில்லை.

நன்கு மாதத்தின் பின் தமிழக சட்டசபைக்கு தேர்தல் நடந்தாலும் பெரிய மாற்றங்கள் வந்து விடப் போவதில்லை; தான் அரசியலில் குதிப்பதற்கு சாதகமான சூழ்நிலைகள் மாறி விடப் போவதில்லை என்று ரஜனி நினைக்கிறார்.

எனவே விரைவில் நடக்கவிருக்கின்ற தேர்தல் முடிவுற்ற பின்னர் மீண்டும் ஒரு ''கிளைமாக்ஸ்'' சூழ்நிலையை உருவாக்கி, அரசியலில் குதித்து. தனிக்கட்சியை ஸ்தாபித்து. நன்கு காலூன்றிய பின்னர், கால அவகாசம் எடுத்துக் கொண்டு தேர்தலைச் சந்திக்கலாம் என வியூகம் வகுக்கின்றார். ரஜனி.

கருமிக்க கூறின்—

"ஓடு மீன் ஓடி உறு மீன் வரும் வரையும்'' வாடி இருக்கும் கொக்கு போல—

''இரையை லாவகமாகச் சிக்க வைப்பதற்கு பதுங்கிக் காத்திருக்கும்'' வேங்கை போல—

ரஜனி காத்திருக்கின்றார் ரஜனி.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமை நோக்கு சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றத்தின் ''முகாமை நோக்கு சஞ்சிகை இதழ் - 1 இன் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறும்.

மன்றத் தலைவர் திரு. போ. இருதயநாதர் தலைமையில் நடைபெறும் விழாவில் யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். [ச]

## ஈழத்தின்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சடுதியாகப் பிரிந்தமை துர் அதிர்ஷ்ட வசமானதாகும்.

அவரது எண்ணங்கள் நிறைவுறவும், இந்து மதம் மேன்மையுறவும் அனைத்து இந்து அமைப்புக்களும், இந்துக்களும் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் திரத்துடன் செயற்படுவதே அன்னாருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

★

## துர்க்கா....

3( ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வதாக அமைவதை அனைவரும் அறிவர்.

ஐயா அவர்கள் கனடா நாட்டில் காலமான செய்தியினால் இந் நாட்டு தமிழ் உள்ளங்கள் பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளன. எனவே இந் நேரத்தில் நாமும் எமது வணக்கத்தையும் அஞ்சலியையும் இப் பெருந்தகையின் திருவடிகளில் சமர்ப்பித்து அமைகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

## இந்து..:

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றைப் பாதுகாத்து அங்கு ஆகம விதிகளின்படி கருமங்கள் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காகவும் தர்மப் பணிகளைப் மேற்கொள்வதற்காகவும் 1992இல் அமைக்கப்பட்ட இந்து சமயப் பேரவையின் ஸ்தாபகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு சிவபதமடையும் வரை அதன் தலைவராகவும் செயற்பட்டார்.

எளிமையும், பணிவும், தூய சிந்தையும் கொண்ட அன்னார் தம்மை எப்போதும் ஒரு தொண்டனாகவே கருதிச் செயற்பட்டார். தூய வெள்ளை உடையும் கழுத்து நிறைய உருத்திராக்க மாலைகளும் கையில் தாளமும் ஏந்திய அந்தத் திருக்கோலத்தை நாம்இனி என்று காண்போம்!

இந்து சமயப் பேரவை தன் ஈடிணையற்ற தலைவனுக்குத் ஆழ்ந்த அஞ்சலிகளை தெரிவித்து அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றது

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!!
ஓம்சாந்தி !!!

## அரசியல்....

( 3ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலையையும் அதனைஉருவாக்கி வழி நடத்தும் தேசியத் தலைவரையும் மனமார நேசித்து எமது தலைவரின் கொள்கைகள் மீதும் போராட்ட உணர்வுகள் மீதும் பற்றுக் கொண்டவராகவும் செயற்பட்டு மிகவும் நெருக்கடியான கால வேளையிலும் எமது விடுதலைப் போராட்டத்திற்கும் எந்தவித தயக்கமுமன்றி தனது பங்களிப்புக்களை செய்து எமது தலைவரின் காலத்திலேயே தமிழினம் விடிவுபெற வேண்டும் என்ற அவாவுடன் செயற்பட்டவராகும். தன்னை விட தேசியத்தை நேசித்து பலவழிகளிலும் தனது பங்களிப்பை ஆற்றிய பெரியாரின் இழப்பு நினைவு கூரப்படவேண்டியதாகும்.

## மருதானையில் தமிழ் இளைஞர் 45 பேர் கைது

கொழும்பு, ஒக். 8

மருதானையில் கடந்த வியாழக்கிழமை வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் 45 தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டோர் அனைவரும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-எ)

# பொலீஸ் ஜீப்பின் மீது ஏறாவூரில் கிரனேட் வீச்சு

கடந்த புதன்கிழமை செங்கலடியில் இருந்து ஏறாவூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த பொலீஸ் ஜீப் ஒன்றை நோக்கி விடுதலைப்புலிகள், கிரனேட் தாக்குதல் நடத்தினர்.

சேத விபரம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இச்சம்பவத்தை அடுத்து ஏறாவூர் பகுதியில் கடைகள் யாவும் பூட்டப்பட்டன; வீதிகளில் மக்களின் நடமாட்டம் குறைந்தது. எனினும் நகர் பின்னர் வழமைக்குத் திரும்பியது. (ஒ-எ)

# மரண அறிவித்தல்கள்

## நடராஜா சண்முகரத்தினம்

நீராவியடியைச் சேர்ந்த நடராஜா சண்முகரத்தினம் (இளைப்பாறிய றோயல் கல்லூரி ஆசிரியர்) நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் தையல்நாயகியின் அன்புக் கணவரும், காந்தா பத்மநாபன், பிறவ்தா மாலைக்கரசன் [மாலைதீவு] ஆகியோரின் அன்புத் தப்பனாரும், காலஞ்சென்ற மகேசன் மற்றும் பத்மராஜா (அவுஸ்திரேலியா), இரத்தினராசா (முன்னாள் நெல் சந்தைப் படுத்தும் சபை - கிளிநொச்சி முகாமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயகுமாரி [மக்கள் வங்கி வடபிரதேச சபை தலைமையகம்], சாந்தினி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், நேமி பார்த்தயன், சாமகீதன், புருஷோத்தமன், நசிகேதன், அபர்ணா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (8-10-95) கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
காந்தா பத்மநாபன்
[மகள்]

55/53, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி.
[38916]

## தம்பையா தாமோதரம்பிள்ளை

சரசாலை வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாக கொண்ட தம்பையா தாமோதரம்பிள்ளை (சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை அன் சன்ஸ், இராசம் மில்ஸ், இராசம் விற்பனை நிலையம் ஸ்தாபகர்) 7-10-95 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவனும் பஞ்சாட்சரம், சந்திரகுமார், நவனகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையும் வைத்தியலிங்கம், இளைய தம்பி ஆகியோரின் சகோதரரும் ஷாலினி, பிரபாலினி, தேனுஜா, சனோஜா, ஹபீசன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் சமக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
தா. நவனகுமார்
(மகன்)

(38909)

## திருமதி சரஸ்வதி அம்மா சாமிநாதஐயர்

(கோண்டாவில் மேற்கு)

காலஞ்சென்ற சாமிநாதஐயரின் மனைவி சரஸ்வதி அம்மா நேற்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சுரேஸசர்மா, சிவகதக்குருக்கள், நாகேஸ்வரி, நிவிர்த்திசாதுகுருக்கள், வைத்தீஸ்வரசர்மா, டாக்டர் இந்துமதி, மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசிறி சிறிஸ்கந்தராஜக்குருக்கள், சர்வானந்தசர்மா, மதுராம்பிகாதேவி, மகாலட்சுமி, சுசிலாதேவி, அபிதகுசலாம்பாள் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவசிறி ராஜராஜக்குருக்கள், தியாகராஜன், கலாநிதி, ஜனனி, நிமேஷிகா, சசிகாந், பிரசாந், வியாசன், அசுவத்தாமன், நீலாட்சி, மீரா, சுபசிரி, தசசிரி, சிறிகிரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் அந்திமக் கிரியைகள் காளிகோவிலடி கோண்டாவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (8-10-95) பிற்பகல் 2 மணிக்கு நாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சா. நிவர்த்திசாதுசர்மா [மகன்]
சிறிஐயா [மருமகன்]

காளி கோவிலடி,
கோண்டாவில் மேற்கு.
(38917)

## திருமதி இராசம்மா இராஜசயா

[K. R. S.]

கோண்டாவில் மேற்கு துரை வீதியைச் சேர்ந்த திருமதி இராசம்மா இராசையா [K. R. S.] நேற்று [7-10-95] கொழும்பில் காலமானார்.

அவரது சமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
K. தேவராஜா
[மருமகன்]
[38918]

யாழ். பல்கலைக்கழகம்.

# இரு ரெலோ உறுப்பினர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஒக். 8

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் கடந்த செவ்வாயன்று ரெலோ இயக்க முன்னாள் உறுப்பினர் ஒருவர் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கே. தங்கவேல் [வயது 32] என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவர் ஆவர்.

இதேவேளை சித்தாண்டிக்கு அருகேயுள்ள சந்திரவெளி கிராமத்திலும் கடந்த புதன்கிழமையும் இருவர் சுடப்பட்டனர். இவர்களுள் கே. கோவிந்தராஜா [வயது 30] என்பவர் மரணமானார்.

ஏ. சபாநாயகம் என்பவர் சூட்டுக்கு இலக்காகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### வித்துடல் கிடையாத 9 மாவீரரின்

# திருவுருவப்படங்கள் இன்று எடுத்துச் செல்லப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 8

வலிகாமம் கிழக்கில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட இடிமுழக்கத் தாக்குதலை முறியடிக்கும் பதில் தாக்குதலில் ஈடுபட்ட சமயம் வீரச்சாவைத் தழுவி வித்துடல் கிடைக்கப்பெறாத:-

வீரவேங்கை மணிவண்ணன் (தங்கவேல் ரவிநாதன் — வவுனியா)

வீரவேங்கை கருவண்ணன் (செல்லையா செகிநாதரன் — மட்டுவில் வடக்கு)

2 ஆம் லெப். இசைவாணன் (ராஜகோபால் விமலராஜ் — மட்டக்களப்பு)

வீரவேங்கை வீரபாண்டியன் (செல்வராசா பரமானந்தன் — மட்டக்களப்பு)

வீரவேங்கை முடியரசன் (அகிலேசபிள்ளை சிவகுமார் — மட்டக்களப்பு)

இன்பழகன் (தம்பிராசா சாந்தகுமார் — யாழ்ப்பாணம்)

வீரவேங்கை தமிழ் மன்னன் (செல்லையா சசிகுமார்- இருபாலை)

வீரவேங்கை நீர் நாடன் [மாணிக்கம் திருநாவுக்கரசு- இளவாலை)

வீரவேங்கை மாவனத்தான் (அழகர்சாமி அருள்குமார்- வவுனியா) ஆகியோரின் திருவுருவப்படங்கள் இன்று மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு ராணுவ மரியாதைகளுடன் நினைவுக்கல் நடப்படும்.

இவர்களில் முதல் இருவரினதும் திருவுருவப்படங்கள் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்படும். ஏனையோரின் திருவுருவப்படங்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்படும்.

# காசுக் கொடுப்பனவு பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 8

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளோருக்கான ஒரு தொகைக் காசு தம்மிடம் உள்ளது என்றும் —

இவர்களை நாளை திங்கள் முற்பகல் 11 மணிக்கு கன்னாதிட்டியில் உள்ள தமிழீழ வைப்பகத்துக்கு வந்து அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

செபமணி புவனேஸ்வரி — ஆத்திரான் சண்டிலிப்பாய்.

திருமதி. ரஞ்சிம் பாலசுப்பிரமணியம் — புத்தூர் வடக்கு, புத்தூர்.

கெ. புனிதவதி கந்தசாமி— தபாற்கந்தோர் வீதி, காங்கேசன் துறை வீதி, சுன்னாகம்

திருமதி. குணவதி கந்தசாமி — யோகேஸ்வரி, நிலாவரை புத்தூர்.

சிறிதரன் குபேராம்பிகை— பத்தமேனி, அச்சுவேலி.

திரு. சதாசிவம் முத்துக்குமார் [ஆசிரியர்] — மித்திரை, குப்பிளான்.

எஸ். கனகசபை — சிவகாம்பிகை நாகலிங்கம் மீசாலை வடக்கு, கொடிகாமம்.

கணபதிப்பிள்ளை — சிவாய் கலட்டி அத்தாய், அல்வாய் தெற்கு, அல்வாய். (ஐ)

# மந்திகை ஆஸ்பத்திரியில் ஜெப ஆலயம்

வடமராட்சி ஒக். 8

மந்திகை ஆஸ்பத்திரியில் மெதடிஸ்த திருச்சபையின் ஜெப ஆலயம் இன்று ஞாயிறு பிற்பகல் 3மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

பருத்தித்துறை கட்டைவேலி சேகரக் குரு அருட்திரு. பி.ஜே. மேதர் ஜெப ஆலயத்தை பிரதிஷ்டை செய்து இறைபணியை ஆரம்பித்து வைப்பார். [ஒ-க-173]

பந்து இப்போது உங்கள் பக்கம்

மூன்று அல்லது ஆறு மாத கால நிலையான வைப்புகளுக்கு நாம் இப்போது வழங்கும் வட்டி

15 வீதம்

★ உங்கள் பணப்பந்தை எங்கள் பக்கம் அடியுங்கள்

★ நாம் திருப்பித் தருவதை பாருங்கள்

கொமர்ஷல் வங்கியின் நிலையான வைப்புகள் உங்கள் பணத்தைப் பெருக்க வழிகாட்டும்

COMMERCIAL BANK

கொமர்ஷல் வங்கி

உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்

[இ-2136]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 8-10-95 இல் அச்சிடப்பட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org